**மோட்டார் வாகன விபத்துக் கோருரிமைத் தீர்ப்பாயம், தேவகோட்டை.**
**முன்னிலை: திருமதி. பா.கலை நிலா, எம்.எல்.,**
**மோட்டார் வாகன விபத்துக் கோருரிமை தீர்ப்பாய நீதிபதி /**
**சார்பு நீதிபதி, தேவகோட்டை.**
**2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 18-ம் நாள் புதன்கிழமை**
**2056 திருவள்ளுவராண்டு விசுவாவசு வருடம் மாசித் திங்கள் 04 ம் நாள்**
**மோட்டார் வாகன விபத்துக் கோருரிமைத் தீர்ப்பாய மனு எண் 180/2019**
**TNSV05-001140-2019**
**---------**

ஜெயக்குமார் ... மனுதாரர்

/ எதிர் /

1. சுப்புலெட்சுமி
3. ஓரியண்டல் இன்சூரன்ஸ் கம்பெனி, காரைக்குடி,
அதன் மேலாளர் மூலமாக.

.... எதிர்மனுதாரர்கள்

இம்மனு என் முன்பாக 13.03.2026 ம் தேதியன்று இறுதியான விசாரணைக்காக வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்குரைஞர் திரு.இரா.வெங்கட்டராமன் அவர்கள் ஆஜராகியும் 1 எதிர்மனுதாரர் ஆஜரின்மையால் ஒருதலைப்பட்சமாக்கப்பட்டும், 2 எதிர்மனுதாரர் தரப்பில் வழக்குரைஞர் திரு.A.தர்மராஜ் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வழக்குரைஞர்களின் வாதுரைகளைக் கேட்டும், இம்மனு சம்பந்தப்பட்ட ஆவணங்களை ஆய்வு செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கலாகும்...

## உ த் த ர வு

மனுதாரர் கோரியுள்ள இழப்பீட்டுத் தொகை ரூ.15,00,000/—த்திற்கும் 100 க்கு ஆண்டுக்கு 12 % வட்டி வீதம் மனு தாக்கல் செய்த தேதி முதல் மனுதாரருக்கு இழப்பீட்டுத் தொகை கிடைக்கும் காலம் வரை 1 வது 2 வது எதிர்மனுதாரர்கள் சேர்ந்தும் தனித்தும் கொடுக்கும்படியும், இவ்வழக்கின் செலவு தொகையை மனுதாரருக்கு எதிர்மனுதாரர்கள் வழங்கும்படி கோரி மனுதாரரால் மோட்டார் வாகனச் சட்டம் பிரிவு 166 மற்றும் விதி 3 (1) ன் படி இம்மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனுதாரர்கள் தரப்பு மனுவின் சுருக்கம் :—**

(i) வாகன விபத்தில் கொடுங்காயம் அடைந்த மனுதாரர் ஜெயக்குமார் கடந்த 29.12.2018 தேதி அன்று காலை TN 63 AW 3844 என்ற பைக்கில் தனது அப்பாவை பின்னால் ஏற்றிக்கொண்டு, அவரது அப்பாவிற்கு முடிவெட்டுவதற்காக முடிவெட்டும் கடையில் விட்டு விட்டு, சிறுநீர் கழிப்பதற்காக தொண்டி ரோட்டில் திருவேகம்புத்தூர் ஆஸ்பத்திரி அருகில் தனது இருசக்கர வாகனத்தை ஓட்டிச்செல்லும்போது, மனுதாரருக்கு போன் அழைப்பு வந்ததால் தனது வாகனத்தை ரோட்டின் ஓரமாக நிறுத்தி பேசிக்கொண்டிருக்கும்போது, பின்னால் TN 57 BF 8922 என்ற டிப்பர் லாரியை ஓட்டி வந்த ஓட்டுனர் அதிவேகமாகவும் கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து மனுதாரர் வாகனத்தின் மீது மோதி மனுதாரர் தூக்கியெறியப்பட்டார். மேற்படி

விபத்தில் மனுதாரருக்கு இடது பக்க தலை, இடது கன்னம் ஆகிய இடங்களில் இரத்த காயமும் இடது தோள்பட்டையில் சிராய்ப்பு காயமும் ஏற்பட்டது. உடன் மனுதாரர் சிவகங்கை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்க்கப்பட்டு பின் மதுரையில் உள்ள வேலம்மாள் மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சைக்கு சேர்க்கப்பட்டார். இதுநாள்வரை வெளிநோயாளியாகவும் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகிறார்.

(ii) இந்த விபத்து டிப்பர் லாரி ஓட்டுநர் தனக்கு முன்பாக ரோட்டின் இடதுபக்க ஓரமாக நின்று கொண்டிருந்த மனுதாரரை கவனிக்காமல் மனுதாரர் மீது மோதி ஏற்பட்டது. தொண்டி மதுரை தேசிய நெடுஞ்சாலை. எனவே, அகலமான ரோட்டில் மண் ரோட்டில் நின்று கொண்டிருந்த மனுதாரர் மீது மோதி இவ்விபத்து ஏற்பட்டுள்ளது. இவ்விபத்து முழுக்க முழுக்க டிப்பர் லாரி ஓட்டுனரின் கவனக்குறைவால் ஏற்பட்டது.

(iii) 1வது எதிர்மனுதாரர் டிப்பர் லாரியின் உரிமையாளர், 2வது எதிர்மனுதாரர் காப்பீட்டு கழகம். 1வது எதிர்மனுதாரும் தனது லாரியை 2வது எதிர்மனுதாரரான காப்பீட்டு கழகத்திடம் 29.08.2018 முதல் 28.08.2019 வரை உள்ள காலங்களுக்கு காப்பீடு செய்துள்ளார். 2வது எதிர்மனுதாரின் ஓட்டுனருக்கு டிப்பர் லாரியை ஓட்டுவதற்கான தகுந்த ஓட்டுனர் உரிமம் உள்ளது. ஆகையால், மனுதாரர் கோரும்

இழப்பீட்டுத்தொகையை கொடுக்க, 1வது 2வது எதிர்மனுதாரர்கள் சேர்ந்தும் தனித்தும் கொடுக்க கடமைப்பட்டுள்ளார்கள்.

(iv) விபத்து சமயம் மனுதாருக்கு வயது 39. அவர் நல்ல ஆரோக்கியமாகவும், திடக்காத்திரமாகவும் இருந்து வந்தார். அவர் சிறுவத்தி குரூப் உதவி ஆய்வாளராக வேலை பார்த்து மாதம் ஒன்றுக்கு ரூ.15,000/- வருமானம் பெற்று வந்தார். மனுதாரர் வேலம்மாள் மருத்துவமனையில் 29.12.2018 முதல் 10.01.2019 வரை 13 நாட்கள் உள்நோயாளியாக தங்கியிருந்து சிகிச்சை பெற்று வந்தார். மனுதாரருக்கு விபத்து காரணமாக முகம் எலும்புகள் பலவற்றில் எலும்பு முறிவு ஏற்பட்டது. இடது புஜத்தில் சிராய்ப்பு காயம் ஏற்பட்டுள்ளது. இரண்டு முட்டியிலும் சிராய்ப்பு ஏற்பட்டுள்ளது. மனுதாரருக்கு முகத்தில் ஏற்பட்ட எலும்பு முறிவினால் கண்களுக்கு செல்லும் நரம்புகள் துண்டாகிவிட்டதால், இடதுகண் பார்வை முற்றிலுமாக பறிபோய்விட்டது. வலது கண் பார்வை குறைந்துள்ளது. கண் கண்ணாடி அணியாமல் மனுதாரரால் எந்த வேலையும் சாதாரண மனிதர் போல் செய்ய இயலாது. மனுதாரர் சுறுசுறுப்பின்றி மந்தமாக காணப்படுகிறார். மனுதாரருக்கு ஏற்பட்ட காயங்கள் விளைவாக மனுதாரர் இசுவை நோய் பாதிப்பு ஏற்படும் அபாயம் உள்ளது. மனுதாரருக்கு கண் பார்வை குறைந்துள்ளதால் இனிவரும் காலங்களில் அவரால் பணியில் தொடர்ந்து வேலை பார்ப்பார் என்று உத்திரவாதம் கிடையாது. மனுதாரருக்கு முகத்தில் பொருத்தப்பட்டுள்ள பிளேட்டை நீக்க இனிவரும் காலங்களில் எதிர்கால

சிகிச்சைகள் செய்ய வேண்டும். மனுதாரருக்கு ஏற்பட்ட காயங்கள் விளைவாக மனுதாரின் பொருள் ஈட்டும் திறன் பாதிக்கப்பட்டுள்ளது.

(v) மனுதாரர் தனக்கு ஏற்பட்ட கொடுங்காயங்களின் விளைவாக பல்வேறு தலைப்பின்கீழ் ரூ.15,00,000/– இழப்பீடு கோரி மோட்டார் வாகனச் சட்டம் பிரிவு 166 ன்கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3) 2 எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்:-**

(i) மனுதாரரின் மனுவில், எதிர்மனுதாரரால் ஒப்புக்கொள்ளும் சங்கதிகளைத் தவிர மற்ற சங்கதிகள் அனைத்தும் தவறானவை என மறுக்கப்படுகின்றன. மனுதாரர் விபத்து ஏற்பட்ட விதம் குறித்து தவறான தகவல்கள் கூறியுள்ளார். விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரர் ஓட்டுநர் காரணம் என்பது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. அதனை மனுதாரரே நிரூபிக்கக் கடமைப்பட்டவர் ஆவார். 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநர் மிதமான வேகத்திலும் சாலை விதிகளை கடைபிடித்தும் சாலையில் இடது ஓரத்தில் வாகனத்தை ஓட்டி ஹாரன் அடித்த பின்னும், மனுதாரர் தனது இருசக்கர வாகனத்தில் மொபைல் போனை பேசிக்கொண்டே லாரியை கவனிக்காமல் திடீரென்று தவறாக வலது பக்கம் திரும்பியதால் அவருக்கு விபத்து ஏற்பட்டது. எனவே, விபத்தானது மனுதாரரின் கவனக்குறைவாலேயே ஏற்பட்டது. மேலும், முதல் தகவல் அறிக்கை மற்றும் மனுவில் கூறியுள்ளது போல் 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநரின்

கவனக்குறைவால் ஏற்படவில்லை. மேலும், விபத்தின்போது மனுதாரர் தலைக் கவசம்அணியவில்லை என்பதால் அவரும் விபத்திற்கு பொறுப்பாவார். எனவே, இந்த எதிர்மனுதாரர் எவ்வித இழப்பீடும் கொடுக்கக் கடமைப்பட்டவர் அல்ல.

(ii) மனுவில் கூறியுள்ள மனுதாரரின் வயது, வேலை, சிகிச்சை கால அளவு, ஊனம், வருமானம், வருமான இழப்பு ஆகியவை மறுக்கப்படுகிறது. அதனை மனுதாரரே தகுந்த வாய்மொழி மற்றும் எழுத்துப்பூர்வ ஆவணங்கள் மூலம் நிரூபிக்கக் கடமைப்பட்டவர் ஆவார். மேலும், ஒவ்வொரு தலைப்பின் கீழும் அவரால் கோரப்பட்டுள்ள இழப்பீட்டுத் தொகை அதிகப்படியானது. எதிர்மனுதாரர் தனது தரப்பு கூடுதல் எதிருரை தாக்கல் செய்யும் உரிமையை தக்கவைத்துக்கொள்கிறார். எனவே, மனு எதிர்மனுதாரரின் செலவுத் தொகையுடன் தள்ளுபடிக்குரியது.

4) இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டியது யாதெனில்,

1. இந்த விபத்தானது யாருடைய கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதையால் நடந்தது ?

2. மனுதாரருக்கு இழப்பீட்டுத் தொகை கிடைக்கத்தக்கதா?

3.அப்படியானால் எவ்வளவு கிடைக்கத்தக்கது?

5) இம்மனுவில் மனுதாரர் தரப்பில் மனுதாரர் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.10 வரையிலான சான்றவாணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. மேலும் மனுதாரர்

தரப்பில் தேவகோட்டை வட்டாட்சியர் அலுவலகத்தில் முதுநிலை வருவாய் அலுவலராக பணிபுரியும் செல்வராஜ் என்பவர் ம.சா.2 ஆக விசாரணை செய்யப்பட்டு, அவரது தரப்பில் ம.சா.ஆ.11 ஆவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சியோ, சான்றாவணங்களோ தாக்கல் செய்யப்படவில்லை. மனுதாரரின் ஊனச் சான்றிதழ் நீ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6) இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது.

**7) பிரச்சனை எண் 1 :**

இம்மனுவானது, மனுதாரர் ஜெயக்குமார் கடந்த 29.12.2018 தேதி அன்று காலை TN 63 AW 3844 என்ற பைக்கில் தனது அப்பாவை பின்னால் ஏற்றிக்கொண்டு, அவரது அப்பாவிற்கு முடிவெட்டுவதற்காக முடிவெட்டும் கடையில் விட்டு விட்டு, சிறுநீர் கழிப்பதற்காக தொண்டி ரோட்டில் திருவேகம்புத்தூர் ஆஸ்பத்திரி அருகில் தனது இருசக்கர வாகனத்தை ஓட்டிச்செல்லும்போது, மனுதாரருக்கு போன் அழைப்பு வந்ததால் தனது வாகனத்தை ரோட்டின் ஓரமாக நிறுத்தி பேசிக்கொண்டிருக்கும்போது, பின்னால் TN 57 BF 8922 என்ற டிப்பர் லாரியை ஓட்டி வந்த ஓட்டுனர் அதிவேகமாகவும் கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து மனுதாரர் வாகனத்தின் மீது மோதி மனுதாரர் தூக்கியெறியப்பட்டதாகவும், அதில் அவருக்கு இடது பக்க தலை, இடது கன்னம் ஆகிய இடங்களில் இரத்த காயமும் இடது தோள்பட்டையில்

சிராய்ப்பு காயமும் ஏற்பட்டதாகவும், உடன் மனுதாரர் சிவகங்கை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்க்கப்பட்டு பின் மதுரையில் உள்ள வேலம்மாள் மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சைக்கு சேர்க்கப்பட்டார் எனவும், எனவே விபத்திற்கு தொண்டி மதுரை தேசிய நெடுஞ்சாலையில் டிப்பர் லாரி ஓட்டுநர் வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரயாகவும் ஓட்டி, அகலமான ரோட்டில் மண் ரோட்டில் நின்று கொண்டிருந்த மனுதாரர் மீது மோதி லாரி ஓட்டுனரின் கவனக்குறைவால் ஏற்பட்டது என மனு தாக்கல் செய்யப்பட்டு, இழப்பீடு கோரப்பட்டுள்ளது.

8) மனுதாரர் தரப்பில், தனது வழக்கினை நிரூபிக்க வேண்டி மனுதாரர் ஜெயக்குமார் ம.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு, அவரது சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்து, மனுவில் உள்ள சங்கதிகளை எடுத்து சொல்லியுள்ளார். மனுதாரர் தனது சாட்சியத்தில் மதகுபட்டி காவல் நிலைய குற்ற எண்.81/2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கை சான்றிட்ட நகலை ம.சா.ஆ.1 ஆகவும், விபத்து வழக்கில் 1ம் எதிர்மனுதாரர் மீது குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, திருவேகம்புத்தூரில் தாக்கல் செய்யப்பட்ட குற்ற இறுதி அறிக்கை ம.சா.ஆ.8 ஆக தாக்கல் செய்துள்ளார். மேலும் மனுதாரரின் வழக்கானது ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கை, ம.சா.ஆ.2 காயச் சான்றிதழ், ம.சா.ஆ.3 ஆன மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை, ம.சா.ஆ.4 ஆன மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை, ம.சா.ஆ.5

மருத்துவமனை விடுவிப்பு, ம.சா.ஆ.6 மருத்துவ பில்கள், ஸ்கேன் ரிப்போர்ட் ம.சா.ஆ.7, புகைப்படங்கள் ம.சா.ஆ.9, சி.டி.ஸ்கேன் ரிப்போர்ட் ம.சா.ஆ.10 ஆகியவை மூலமும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

9) ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கையில் சம்பவத் தினத்தன்று கடந்த 29.12.2018 ம் தேதி தனது அப்பாவுக்கு முடி வெட்டுவதற்காக 63 AW 3844 இருசக்கர வாகனத்தில் ஏற்றிக்கொண்டு காலையில் ஊரிலிருந்து புறப்பட்டு திருவேகம்புத்தூர் முடிவெட்டும் கடையில் தனது அப்பாவை இறக்கிவிட்டு சிறுநீர் கழிப்பதற்காக தொண்டி ரோட்டில் திருவேகம்புத்தூர் ஆஸ்பத்திரி அருகில் தனது வாகனத்தை ஓட்டி செல்லும்போது தனக்கு போன் வந்ததால் தனது வாகனத்தை ரோட்டில் இடதுபுறமாக நிறுத்தி பேசி கொண்டிருந்தபோது அப்போது காலை சுமார் 8.00 மணியளவில் தனக்கு பின்னால் TN 57 BF 8922 டிப்பர் லாரியை அதிவேகமாகவும் கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து தனது வாகனத்திற்கு பின்னால் மோதி தூக்கி வீசப்பட்டதில் தனக்கு இடது பக்க தலையில் ரத்தக்காயமும் இடது கன்னம் இடது தோள்பட்டையில் சிராய்ப்பு காயம் ஏற்பட்டு, தலையில் ஏற்பட்ட காயத்தின் விளைவாக முக எலும்புகள் பலவற்றில் எலும்பு முறிவு ஏற்பட்டதாகவும், புஜத்தில் சிராய்ப்பு காயம் ஏற்பட்டதாகவும், இரண்டு முட்டியிலும் சிராய்ப்பு காயம் ஏற்பட்டு, மனுதாரர் உடன் வேலம்மாள் மருத்துவமனையில் உள்நோயாளியாக சேர்க்கப்பட்டு, 13 நாட்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு வந்ததாகவும், இவ்விபத்தானது லாரியை ஓட்டி வந்த ஓட்டுநர்

கவனக்குறைவால் இவ்விபத்து ஏற்பட்டதாக தெரிய வருகிறது. இதனை உறுதிபடுத்தும் வகையில், திருவேகம்புத்தூர் காவல் நிலைய குற்ற எண் 81/2018 ன் முதல் தகவல் அறிக்கை ம.சா.ஆ.1 ஆகவும், குற்ற இறுதி அறிக்கை ம.சா.ஆ.8 ஆகவும் தாக்கல் செய்யப்பட்டு, 1ம் எதிர்மனுதாரரின் வாகனத்தை ஓட்டிய ஓட்டுநர் மூலமாக விபத்து ஏற்பட்டது தெரிய வருகிறது. எனவே, 1ம் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுநரின் அதிவேகம், அஜாக்கிரதையால் விபத்து ஏற்பட்டது தெரிய வருகிறது.

10) எதிர்மனுதாரர் தரப்பில், விபத்தானது எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுநரின் கவனக்குறைவால் ஏற்படவில்லை எனவும், மனுதாரரின் கவனக்குறைவாலேயே விபத்து ஏற்பட்டது என்றும், விபத்து சமயத்தில் மனுதாரர் தலைகவசம் அணியவில்லை என்றும், எனவே விபத்திற்கு அவரே காரணம் என்றும் ஆட்சேபனை செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் மனுதாரர் தலைக்கவசம் விபத்தின் போது அணியவில்லை என்பது அவரது சாட்யதித்திலிருந்தே தெரிய வந்தாலும், எதிர்மனுதாரர் தரப்பு கூற்றான விபத்து 1ம் எதிர்மனுதாரர் கவனக்குறைவால் ஏற்படவில்லை என்பதை மெய்ப்பிக்கும் வகையில் சாட்சிய, சான்றாவணங்கள் எதுவும் எதிர்மனுதாரர் தரப்பில் வழங்கப்படவில்லை. எனவே, விபத்து குறித்து மனுதாரரின் வாய்மொழி சாட்சியங்களுக்கு எதிராகவோ எதிர்மனுதாரருக்கு சாதகமாகவோ குறுக்கு விசாரணை சமயத்திலும் எதிருரையின் அடிப்படையிலும் எந்தவித சங்கதிகளோ

வெளிக்கொணரப்படவில்லை என இத்தீர்ப்பாயத்தால் காணப்படுகிறது. மேலும் மேற்கண்ட சூழ்நிலைகளை பரிசீலனை செய்யும்போது, 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநர் ஓட்டி வந்த லாரி ஓட்டுநரின் அதிவேகம் மற்றும் அஜாக்கிரதையால்தான் விபத்து ஏற்பட்டு அதனடிப்படையில் மனுதாரருக்கு காயம் ஏற்பட்டது என்றும், எனவே விபத்திற்கு காரணம் 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநர் என இத்தீர்ப்பாயம் தீர்மானித்து பிரச்சனை 1க்கு தீர்வு காணப்படுகிறது.

**11) பிரச்சனை 2:**

விபத்து நடந்தது 2018ஆம் வருடம். மனுதாரரின் வயது 39 எனவும், விபத்திற்கு முன்பு மனுதாரர் ஆரோக்கியமாகவும் திடகாத்திரமாகவும் இருந்து சிறுவத்தி குரூப் கிராம உதவியாளராக வேலை பார்த்து மாதம் ஒன்றுக்கு ரூ.15,000/- வரை வருமானம் பெற்று வந்ததாகவும், மேற்கண்ட விபத்தில் தலையில் ஏற்பட்ட காயத்தின் விளைவாக முகஎலும்புகள் பலவற்றில் எலும்பு முறிவு ஏற்பட்டதாகவும், புஜத்தில் சிராய்ப்பு காயம் ஏற்பட்டதாகவும், இரண்டு முட்டியிலும் சிராய்ப்பு காயம் ஏற்பட்டதாகவும், மேலும் முகத்தில் ஏற்பட்ட எலும்பு முறிவினால் கண்களுக்கு செல்லும் நரம்புகள் துண்டாகிவிட்ட காரணத்தினால் தனது இடது கண் பார்வை முற்றிலுமாக பறிபோய்விட்டதாகவும், வலது கண் பார்வையும் குறைந்து வருவதாகவும், தன்னால் கண் கண்ணாடி அணியாமல் எந்த வேலையும் செய்ய முடியாது என்றும், தலையில்

ஏற்பட்ட காயத்தினால் சாதாரண மனிதரை போல தன்னால் வேலை செய்ய முடியாது என்றும் சுறுசுறுப்பன்றி மந்தமாக காணப்படுவதாகவும், மேலும் முகத்தில் பொருத்தப்பட்டுள்ள பிளேட்டை நீக்க எதிர்கால சிகிச்சை செய்ய வேண்டும் என்றும், மேலும் மனுதாரருக்கு மேற்படி காயங்களின் விளைவாக பொருளீட்டும் திறன் பாதிக்கப்பட்டுள்ளது என்றும், மனுதாரருக்கு ஏற்பட்ட கொடுங்காயத்திற்கு ரூ.15,00,000/– இழப்பீடு வழங்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

12) விபத்து சமயத்தில் மனுதாரர் வயது 39 என மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே 2018 ஆம் வருடத்தில் மனுதாரரின் வயது 39 என இத்தீர்ப்பாயத்தால் முடிவு காணப்படுகிறது.

13) மனுதாரர் சிறுவத்தி குரூப் உதவி கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து மாதம் ரூ.15,000/– சம்பளம் பெற்றார் என்பதற்கான ஆவணம் ம.சா.ஆ.11 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

14) மனுதாரர் தரப்பில் தான் விபத்தினால் ஏற்பட்ட காயத்தின் அடிப்படையில் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்து வேலைக்கு செல்லவில்லை என குறிப்பிட்டு சொல்லப்பட்டு, அவருக்கு வருமான இழப்பு ஏற்பட்டுஇருந்ததாக சொல்லப்பட்டு இருந்தாலும், அ.சா2 ன் சாட்சியத்திலிருந்து மனுதாரருக்கு விபத்திற்கு பின்னும், சம்பளத்தில் எவ்வித மாற்றமும் இல்லை என்றும், விபத்தினால் ஏற்பட்ட காயங்கள் தற்போது குணமடைந்து வந்து மீண்டும் மனுதாரர் தான் ஏற்கனவே

பார்த்த வேலையை பார்த்து வருவதாக சொல்லப்பட்டுள்ளது. மனுதாரரின் சாட்சியத்தின் அடிப்படையில் தெரிய வருகிறது. எனினும் அவ் ஊனத்தினால் மனுதாரர் ஏற்கனவே பார்த்த வேலையை செய்ய இயலாத சூழ்நிலை ஏற்படவில்லை என்பது தெரிய வருவதால் அதனை functional disability ஆக கருத இயலாது. மேலும், விபத்து சமயத்தில் அவர் எடுத்த விடுப்பிற்கும் சம்பளம் எதுவும் பிடித்தம் செய்யப்படவில்லை என அ.சா.2 ன் சாட்சியத்திலிருந்து தெரிய வருகின்றது என்ற நிலையில், அவருக்கு வருமான இழப்பு ஏற்பட்டதாக கருத இயலாது என இத்தீர்ப்பாயம் தீர்மானிக்கிறது.

15) மருத்துவ குழுமம் வழங்கியுள்ள நீ.ம.சாஆ.1 ஊனச் சான்றிதழில் மனுதாரருக்கு ஊனம் 30% என காண்பிக்கப்பட்டுள்ளது. எனவே, சதவீதம் அடிப்படையிலேயே ஊனம் கணக்கிடப்படுகிறது. 2018 ம் வருடத்திற்கு 1% வீதத்திற்கு ரூ.5,000/- என்ற நிலையில் அவரது ஊனத்தை 30% என முடிவு செய்து சதவீத அடிப்படையில் ஊனத்தினால் ஏற்பட்ட இழப்பீட்டின் சதவீதத்தை கணக்கீடு செய்யலாம் என 2021 (1) TNMIC 48 என்ற முன் தீர்ப்புரையின் அடிப்படையில் இந்த தீர்ப்பாயம் முடிவு செய்கிறது. எனவே, 5000 x 30 = 1,50,000/- என மனுதாரரின் ஊன இழப்பீடாக இத்தீர்ப்பாயம் கணக்கீடு செய்கிறது.

16) ம.சா.ஆ.2 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ள காயச் சான்றிதழ் மற்றும் ம.சா.ஆ.7 விடுவிப்பு அறிக்கை ஆகியவற்றை பரிசீலிக்கையில்

மனுதாரர் 29.12.2018 முதல் 10.01.2019 வரையில் வேலம்மாள் மருத்துவமனையில் 13 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்து வந்துள்ளார் என்பது தெரிய வருகிறது. எனவே அதன் அடிப்படையில் மனுதாரருக்கு Attender Charges ஆக ரூ.10,000/– வழங்கப்படுகிறது.

17) மனுதாரரின் மருத்துவச் செலவுக்காக பில்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட பில்கள் ம.சா.ஆ.6 தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதன் மதிப்பு ரூ.1,35,697/– ஆகும். எனவே மேற்கண்ட பில்களின் அடிப்படையில் மனுதாரருக்கு ஏற்பட்ட மருத்துவ செலவாக ரூ.1,35,697/–என நிர்ணயிக்கப்படுகிறது.

18) மனுதாரரின் எதிர்கால மருத்துவ செலவிற்காக ரூ.2,00,000/– கோரப்பட்டுள்ளது. எனினும், அவர் விபத்திற்கு முன்பு என்ன பணி மேற்கொண்டாரோ அதனையே தற்போது வரையில் செய்து வருவதாக தனது குறுக்கு விசாரணையில் கூறியுள்ளார். மேற்படி குறுக்கு விசாரணை வாயிலாக தற்போது வரையில் சிறுவத்தி குரூப் கிராம நிர்வாக உதவியாளராக வேலை பார்த்து வருகிறார் என்பது தெரிய வருகிறது. எனினும், நீ.ம.சா.ஆ.1ன் அடிப்படையில் அவருக்கு முகத்தில் பொருத்தப்பட்டுள்ள பிளேட்டை நீக்க எதிர்கால சிகிச்சை மேற்கொள்ள வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே எதிர்கால மருத்துவ செலவாக ரூ.50,000/– வழங்கப்படுகிறது.

19) மனுதாரருக்கு முகத்தில் ஏற்பட்ட எலும்பு முறிவிற்கு ஆப்ரேசன் செய்யப்பட்டதன் அடிப்படையில் மனுதாரருக்கு ஏற்பட்ட வலி மற்றும் வேதனைக்காக ரூ.25,000/– அனுமதிக்கப்படுகிறது. மேலும், வசதி இழப்பிற்காக ரூ.25,000/– அனுமதிக்கப்படுகிறது.

20) மனுதாரருக்கு போக்குவரத்து செலவாக ரூ.5,000/– அனுமதிக்கப்படுகிறது.

21) மனுதாரருக்கு ஊட்டச் சத்து செலவாக ரூ.10,000/– அனுமதிக்கப்படுகிறது.

22) மனுதாரருக்கு ஆடை மற்றும் பொருள் சேதத்திற்கு ரூ.1,000/– அனுமதிக்கப்படுகிறது.

23) மேலே கண்ட விவாதங்களிலிருந்து இந்த வழக்கு விபத்தானது 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநரின் கவனக்குறைவால் ஏற்பட்டுள்ளது என்றும், 1ம் எதிர்மனுதாரரின் வாகனம் 3ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டிருப்பதாலும் மனுதாரருக்கு சேர வேண்டிய இழப்பீட்டுத் தொகையை 2ம் எதிர்மனுதாரர் நிறுவனமே கீழ்க்கண்ட கணக்கீட்டின் அடிப்படையில் வழங்க வேண்டும் என்றும் இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

| வரிசை எண் | விபரம் | இழப்பீட்டுத் தொகை ரூபாய் |
|---|---|---|
| 1 | 30% ஊனத்திற்கு | 1,50,000/- |
| 2 | மருத்துவ பில்களின் அடிப்படையில் | 1,35,697/- |
| 3 | எதிர்கால மருத்துவ செலவிற்காக | 50,000/- |
| 4 | வலி மற்றும் வேதனைக்கு | 25,000/- |
| 5 | மருத்துவமனையில் உடன் இருந்தோர் செலவு | 10,000/- |
| 6 | ஊட்டச் சத்து மற்றும் பொருள் இழப்பிற்கு | 10,000/- |
| 7 | போக்குவரத்துச் செலவு | 5,000/- |
| 8 | ஆடை, பொருள் சேதத்திற்கு | 1,000/- |
| 9 | வசதி இழப்பிற்காக | 25,000/- |
| | ஆக மொத்தம் ரூ. | 4,11,697/- |

24) மனுதாரர் தலைக்கவசம் அணியவில்லை என 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறிப்பாக எதிர்வாதம் எடுக்கப்பட்ட நிலையில், மனுதாரர் தனது சாட்சியத்தில், இதனை மறுக்காமல் விபத்து சமயத்தில் தலைக்கவசத்தை வாகனத்தின் மீது வைத்திருந்ததாகவும், தலையில் அணியவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளதால், மேற்படி அவர் தலைக்கவசம் அணியாததற்கு இழப்பீட்டுத் தொகையில் 10 சதவீதத்தை

கழித்துக்கொள்ள வேண்டியது என இத்தீர்ப்பாயம் முடிவு செய்து, ரூ.4,11,697 ல் 10 சதவீதம் கழிக்கப்படும்போது ரூ.4,11,697 x 10 / 100 = 41170. 4,11,697 – 41170 = 3,69,997/– என்பதால் மனுதாரருக்கு கிடைக்க வேண்டிய இழப்பீட்டுத் தொகை ரூ.3,69,997/– என இத்தீர்ப்பாயம் முடிவு காண்கிறது.

25) மேலே கண்ட விவாதங்களிலிருந்து இந்த விபத்தானது 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநரின் கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதையால் தான் நடந்தது என்றும், மனுதாரருக்கு இழப்பீட்டுத் தொகையாக ரூ.3,69,997/– கிடைக்கத்தக்கது என்றும், அதனை 1, 2 எதிர்மனுதாரர்கள்கூட்டாகவோ, தனித்தனியாகவோ கொடுக்கக் கடமைப்பட்டவர்கள் என இத்தீர்ப்பாயம் தீர்மானிக்கிறது.

இறுதியில் மனு பகுதியாக செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது.

1) மனுதாரருக்கு 2ம் எதிர்மனுதாரர் நிறுவனம் இழப்பீட்டுத் தொகையாக ரூ.3,69,997/–ஐ மனு கோப்பிற்கு எடுத்த நாளிலிருந்து தொகை செலுத்தும் தேதி வரை 7.5% வட்டியுடன் (தவறுகைக்காக தள்ளுபடி செய்யப்பட்டிருப்பின் அக்காலம் நீங்கலாக) சேர்த்து ஒரு மாத காலத்திற்குள் இத்தீர்ப்பாயத்தின் வங்கிக் கணக்கு VAN (Virtual Account Number) SCDVKORIENTKKD1802019 ல் வைப்பீடு செய்து தகவல் தெரிவிக்குமாறு உத்தரவிடப்படுகிறது.

2) வழக்குரைஞர் கட்டணம் ரூ.11,900/— என்று நிர்ணயம் செய்து உத்தரவிடப்படுகிறது.

3) மனுதாரர் ஏற்கனவே செலுத்திய ரூ.372.50/—போக மீதி நீதிமன்றக் கட்டணம் ரூ.2,700/—ஐ 15 நாட்களுக்குள் செலுத்த வேண்டும் என்றும், தவறும்பட்சத்தில் அந்த நாட்களுக்குரிய வட்டியை இழக்க வேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது.

4) மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற முன்தீர்ப்பு வழக்கு எண் Tr.Cmp 264 to 281 of 2020 M/s.Cholamandalam M/s. General Insurance Company Ltd., Vs.Mr.Ayyanar and Others ல் 11.05.2020 அன்று பிறப்பித்த உத்தரவுப் படி உத்தரவாணையின் விவரங்கள் அனைத்தும் இந்த உத்தரவில் சேர்க்கப்பட்டு விட்டது. எனவே தனியாக உத்தரவாணை பிறப்பிக்கப்படாது.

இவ்வுத்தரவு என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 2026 மார்ச் திங்கள் 18ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

KALAINILA Digitally signed by KALAINILA

மோட்டார் வாகன விபத்துக் கோருரிமை
தீர்ப்பாய / சார்பு நீதிபதி, தேவகோட்டை.

**<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்:</u>**

ம.சா.1 – ஜெயக்குமார் ( மனுதாரர்)

ம.சா.2 – செல்வராஜ்

**<u>மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்:</u>**

| | | | |
|---|---|---|---|
| ம.சா.ஆ.1 | 30.12.2018 | முதல் தகவல் அறிக்கை | சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.2 | 29.12.2018 | காயச்சான்று | சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.3 | 25.2.2019 | மோட்டார் வாகன ஆய்வாளர்அறிக்கை | சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.4 | 03.01.2019 | மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை | சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.5 | 10.01.2019 | மருத்துவமனை விடுவிப்பு | சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.6 | -- | மருத்துவ பில்கள் | அசல் |
| ம.சா.ஆ.7 | 03.08.2019 | ஸ்கேன் ரிப்போர்ட் | அசல் |
| ம.சா.ஆ.8 | 26.2.2019 | இறுதி அறிக்கை | அசல் |
| ம.சா.ஆ.9 | -- | புகைப்படங்கள் | அசல் |
| ம.சா.ஆ.10 | 29.12.2018 | சி.டி.ஸ்கேன் ரிப்போர்ட் | அசல் |
| ம.சா.ஆ.11 | -- | சம்பள சான்றிதழ் | கணிணி நகல் |

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் :</u>**

– இல்லை––

**நீதிமன்ற சான்றாவணங்கள் :**

| | | | | |
|---|---|---|---|---|
| நீ.ம.சா.ஆ.1 | -- | ஊனச் சான்றிதழ் | | அசல் |

KALAINILA Digitally signed by KALAINILA

மோட்டார் வாகன விபத்துக் கோருரிமை

தீர்ப்பாய / சார்பு நீதிபதி, தேவகோட்டை.